7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றி புள்ளிவிவரங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் இப்பொழுது சில அறிவிப்புக்களைத் தர விரும்புகிறேன். 3-வது, 4-வது, 5-வது சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பெற்ற ஒத்தி வைப்புத் தீர்மானம், உரிமை மீறல் பிரச்சனை, கவன ஈர்ப்புகள் ஆகியவைகளின் எண்ணிக்கையோடு 6-வது சட்டமன்றப் பேரவையில், இந்த பத்து மாதங்களில் கொண்டு வரப்பெற்றுள்ள எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் இதற்குள் எவ்வளவு அதிகமாக வந்துள்ளன என்பது விளங்கும். 1962-ல் இருந்து 1967-வரை 5 ஆண்டுகளில்-ஒத்தி வைப்புத் தீர்மானம் வரப்பெற்றவை-166, எடுத்துக்கொள்ளப் பெற்றவை-149, 1967-ல் இருந்து 1970-வரை வரப்பெற்றவை 536, எடுத்துக்கொள்ளப் பெற்றவை-289, 1971-ல் இருந்து 1976-வரை-வரப்பெற்றவை 1,270, எடுத்துக்கொள்ளப்பெற்றவை 530, 1977-78-ல் வரப்பெற்றவை 617, எடுத்துக் கொள்ளப் பெற்றவை 209, அதே போன்று, உரிமைப் பிரச்னை-1962-ல் இருந்து 1967வரை, 5 ஆண்டுகளில் வரப்பெற்றவை—51, எடுத்துக் கொள்ளப் பெற்றவை-46, 1967-ல் இருந்து 1970-வரை—வரப் பெற்றவை 74, எடுத்துக்கொள்ளப்பெற்றவை 61, இதையெல்லாம் நான் சொல்வதற்குக் நான் காரணம் எந்த அளவிற்கு உங்களோடு இருந்து இருக்கிறேன் என்பதற்காகத்தான்-1971—ல் இருந்து 1976-வரை வரப்பெற்றவை 87, எடுத்துக்கொள்ளப்பெற்றவை 42, 1977-78-ல் இந்த 10- மாதங்களில் வரப்பெற்றவை 73, எடுத்துக் கொள்ளப்பெற்றவை 58, கவனஈர்ப்புகள்—1962-முதல் 1967-வரை 5 ஆண்டுகளில்-வரப்பெற்றவை 342, எடுத்துக்கொள்ளப் பெற்றவை 196. 1967-ல்இருந்து 1970-வரை வரப்பெற்றவை 723, எடுத்துக் கொள்ளப்பெற்றவை 290, அதே போன்று 1971 முதல் 1976—வரை வரப்பெற்றவை 1,326, எடுத்துக் கொள்ளப் பெற்றவை 271, 1977-78-ல் இந்த 10 மாதங்களில் வரப்பெற்றவை 695, எடுத்துக்கொள்ளப்பெற்றவை-216. எவ்வளவு லிபரலாக இருந்து இருக்கிறேன் பாருங்கள்.

இந்த வரவு-செலவுக் கூட்டத்தொடர் மொத்தம் 39 நாட்கள் நடைபெற்றுள்ளன. பொது விவாதத்திற்காக எடுத்துக்கொள்ளப் பெற்ற நாட்கள் 7. மானியக்கோரிக்கை மீதான விவாதமும் வாக்கெடுப்பும் 22 நாட்கள் நடைபெற்றுள்ளன. விவாதித்து நிறைவேற்றப்பெற்ற மானியக் கோரிக்கைகள் 53, விவாதமின்றி நிறைவேற்றப்பெற்றவை 5. இக்கூட்டத்தொடரில் விடையளிக்கப் பெற்ற வினாக்கள்: குறுகிய கால வினா 19, உடுக்குறியிடப் பெற்றவை-650, உடுக்குறியிடப்பெறுதவை-191, துணை வினாக்கள் 2,196. பேரவையில் நிறைவேற்றப்பெற்ற மசோதாக்கள் 11,

1978 ஏப்ரல் 7] [பேரவைத் தலைவர்]

ஆய்வுக்குழுவுக்கு அனுப்பப்பெற்றது-1. விதி 82-ன் கீழ் பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கைகள்-9. சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளைக் காண வந்துள்ள பார்வையாளர்கள்: மொத்தம் 54,285. மேலும், ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக் பாராளு மன்ற அவைத் தலைவர் தலைமையில் அந்நாட்டின் பாராளுமன்ற குழு, 6-3-78-ம் நாளன்று நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகளைக் காண வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து, ஆளும் கட்சியில் இருக்கும் அமைச்சர்களும், ஆளும் கட்சி மன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும், மன்ற உறுப்பினர்களும் என்னோடு இத்தனை நாட்கள் சிறப்பாக ஒத்துழைத்து, இந்த மன்றத்தில் நம்முடைய மரபு காத்து அன்பு காட்டியதற்கும் சில நாட்களில் நான் வேகத்தோடு பேசியிருக்கலாம், உறுப்பினர்களும் வேகத்தோடு இருந்திருக்கலாம், அந்த அன்பு பரிமாற்றம், அண்ணன்-தம்பி இடையே ஏற்பட்ட பரிமாற்றம் என்றும், எந்த உறுப்பினரும் அவைத் தலைவர் மீது எந்த விதமான மாச்சர்யத்தையோ, மனத்தாங்கலையோ வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லி, உங்களுடைய ஒத்துழைப்பு என்றென்றும். நான் இருக்கிற வரையில், நீங்கள் தந்தாக வேண்டும் என்று நான் பரிவோடு கேட்டுகொள்கிறேன்.

தற்போது, பேரவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைப்பது குறித்து, மாண்புமிகு அவை முன்னவர் ஒரு தீர்மானத்தை முன்மொழிவார்.

(8) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) பேரவை நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

''அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், பேரவையை இன்றையிலிருந்து கால வரம்பின்றி ஒத்திவைக்கலாம்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.